TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213073

1. District மாவட்டம் Tenkasi | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 04/2024 | Date: நாள் 11.03.2024

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended in Act 16 of 2018. Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 07.03.2024 16.00 hrs | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.03.2024 | Time : நேரம் 15.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.03.2024 | Time நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Keela Ambur. 30 Km South East
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் CHELLAIAH | (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர் MUTHU KARUPPAN
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 1966 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் FARMER | (g) Address முகவரி 5/151 YADAVAR STREET, KEELA AMBUR, TENKASI DISTRICT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

A-1 Tr.Ganesan, Village Administrative Officer, Keela Ambur Village, Tenkasi Taluk, Tenkasi District. A-2 Tr.Subramanian, Village Assistant, Keela Ambur Village, Tenkasi Taluk, Tenkasi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்மந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவைப்பட்டால் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்மந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவைப்பட்டால் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 11.03.2024-ம் தேதி பிற்பகல் 15.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் M.பால் சுதர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தென்காசி தாலுகா கீழ ஆம்பூர் கதவு எண்.5/151, யாதவர் தெருவில் குடியிருந்து வரும் திரு.முத்துகருப்பன் மகன் திரு.செல்லையா என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, ரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கீழ ஆம்பூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.கணேசன் மற்றும் தலையாரி திரு.சுப்பிரமணியன் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 11.03.2024-ம் தேதி மாலை 16.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2024 u/s 7 of the PC Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன்.

அனுப்புநர் M.செல்லையா, வயது 57/24, த/பெ முத்துகருப்பன், 5/151 யாதவர் தெரு, கீழ

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .......................... Rank .......................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே தந்த முறைப்பாட்டின் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுத்தல் .......................... பதவி .......................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. முறைப்பாட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M [signature]
11.3.24.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
முறைப்பாட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 11/3/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. PAUL SUTHER
Rank: நிலை .......................... No. எண் ..........
DSP. V&AC. Tenkasi.

ஆம்பூர் கிராமம், தென்காசி மாவட்டம். பெறுனர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தென்காசி. அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆடு வளர்த்தும், விவசாயமும் செய்து வருகிறேன். எனது அக்கா சொர்ணத்தம்மாளுக்கு மூன்று மகள்கள் மற்றும் இரண்டு மகன்கள் உள்ளனர். எனது அக்காவின் மூத்த மகள் முத்துலட்சுமியை சுமார் 27 வருடங்களுக்கு முன் நான் திருமணம் செய்தேன். எங்கள் ஊரைச் சேர்ந்த திரு.நம்பிராஜன் என்பவருக்கு எனது அக்காவின் இரண்டாவது மகள் திருமதி.பேச்சியம்மாளை சுமார் 20 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொடுத்தார். திரு.நம்பிராஜனை அவரது அத்தை திருமதி.ஆண்டாள் அம்மாள் மற்றும் அவரது கணவர் திரு.கோவிந்த நம்பியர் இருவரும் தத்து எடுத்து வளர்த்தார்கள். தத்தெடுத்தற்கு பத்திரம் பதிவு செய்துள்ளார்கள். திருமதி.ஆண்டாள் அம்மாளின் அண்ணன் திரு.ராமசாமி அவர்கள் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரது மனைவி திருமதி.ராக்கத்தி அம்மாள் பெயருக்கு எழுதிகொடுத்துள்ளார். பின்பு ராமசாமியின் கடைசி காலத்தில் தனது மனைவி ராக்கத்தி அம்மாளுக்கு வாரிசு ஏற்படாத பட்சத்தில் தனது கூடப்பிறந்த தங்கையான திருமதி.ஆண்டாள் அம்மாளின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட வேண்டியது என எழுதி கொடுத்துள்ளார். இந்நிலையில் திருமதி.ராக்காத்தி அம்மாள் கடந்த 01.06.2014ம் தேதி இறந்துவிட்டார். அதனால் திருமதி.ராக்காத்தி அம்மாள் பெயரில் உள்ள கீழ ஆம்பூர் நத்தம் புல எண்.588/13ல் 4 சென்ட் வீட்டு மனை இடத்தை திருமதி.ஆண்டாள் அம்மாளின் வாரிசு என்ற அடிப்படையில் தனது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்து தர தென்காசி தாசில்தார் அவர்களுக்கு கடந்த ஜனவரி மாதத்தில் நம்பிராஜனுடன் நானும் சென்று மனு கொடுத்தோம். தென்காசி தாசில்தார் அவர்கள் மனுவில் அவருடைய கையெழுத்து போட்டு எங்களிடம் மனுவை திரும்ப கொடுத்து கீழ ஆம்பூர் VAO விடம் கொடுக்கச் சொன்னார்கள். மறுநாளில் இருந்து பொங்கல் லீவு என்பதால் ஜனவரி 22ம் தேதி கீழ ஆம்பூர் VAO திரு.கணேசன் அவர்களிடம் கொடுத்தோம். அவர் நான் படித்துவிட்டு சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு எங்களிடம் மனுவை வாங்கி வைத்துக்கொண்டார். திரு.நம்பிராஜனுக்கு உடல்நிலை சரியில்லாததால் என்னை பட்டா பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக அலைந்து பார்க்கச்சொன்னார். நானும் பலமுறை VAOவை நேரில் பார்த்தபோது இன்னும் படிக்கவில்லை என்று சொல்லிவந்தார். கடந்த பிப்ரவரி மாதத்தில் VAO திரு.கணேசன் அவர்களை பார்த்தபோது அதிக பணம் செலவாகும், பணத்தை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள் தலையாரி சுப்பிரமணியனிடம் சொல்லி அனுப்புகிறேன் என்று சொன்னார். கடந்த 06.03.2024ம் தேதி இரவு தலையாரி திரு.சுப்பிரமணியன் என்னிடம் நாளைக்கு VAOவை வந்து பார்க்க சொன்னதாக சொன்னார். நானும் மறுநாள் 07.03.2024ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் கீழ ஆம்பூர் VAO அலுவலகம் சென்று திரு.கணேசன் அவர்களை பார்த்தபோது

அவர் பட்டா மாறுதலுக்கு ஆன்லைனில் அப்ளை செய்துவிட்டு வாருங்கள் என்று சொன்னார். நான் கீழ ஆம்பூரில் உள்ள இ சேவை மையத்தில் திரு.நம்பிராஜன் பெயரில் பட்டா மாறுதலுக்கு அப்ளை செய்துவிட்டு 07.03.2024 ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு போல VAO அலுவலகம் சென்று பார்த்தபோது VAO-வும், தலையாரி சுப்பிரமணியனும் இருந்தார்கள். நான் ஆன்லைனில் பதிவு செய்து விட்டேன் என கூறினேன். அப்போது VAO- பட்டா கையில் எழுதி கொடுப்பதாக இருந்தால் எழுதி கொடுத்து விடலாம். அது ஆறுமாசம் தான் செல்லும், ஆனால் இது கம்ப்யூட்டர் பட்டா, அதுக்கு ரூபாய் 50,000/- செலவாகும் என்று சொன்னார். என்னால் அவ்வளவு பணம் தரஇயலாது எனக்கூறிய போது அருகிலிருந்த சுப்பிரமணியனை காண்பித்து எல்லாம் தலையாரியிடம் கூறியுள்ளேன் என கூறினார். உடனே தலையாரி என்னை வெளியே வரச்சொன்னார். நானும் வெளியே வந்து தலையாயரிடம் பேசியபோது அவர் VAO -ரூ.50,000/-க்கு கீழே குறைக்க மாட்டார் என சொன்னார். நான் என்னால் அவ்வளவு பணம் தர இயலாது என திரும்ப திரும்ப கூறியதும், அப்போ ரூ.40,000/- கொண்டு வா நான் VAO விடம் சொல்கிறேன் எனக்கூறினார். அதுவும் கொஞ்சம் கஷ்டம் என கூறியதும், பாதிப்பணம் ரூ.20,000/-ஐ திங்கள் அல்லது செவ்வாய் கிழமை கொண்டு வா என சொன்னார். நான் மீண்டும் VAO அலுவலகத்திற்கு சென்று VAO திரு.கணேசன் அவர்களை பார்த்து கேட்டபோது அவர் சுப்பிரமணியன் சொன்னதுபோல் நடந்து கொள்ளுங்கள். கம்ப்யூட்டர் பட்டா வாங்கி விடலாம் எனக்கூறினார். நானும் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மேற்படி தகவலை திரு.நம்பிராஜனிடம் சொன்னதற்கு, நம்மிடம் ஆவணங்கள் சரியாக உள்ளது, லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை என்ன செய்யலாம் என்று கேட்டார். நான் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கலாம் என சொன்னேன். அதற்கு அவரும் சரி என்று சொன்னார். எனவே, என்னிடம் தம்பி திரு.நம்பிராஜன் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சமாக முதல் தவணையாக ரூ.20,000/- கேட்ட கீழ ஆம்பூர் திரு.கணேசன் மற்றும் தலையாரி திரு.சுப்பிரமணியன் ஆகிய இருவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒம்.M.செல்லையா) 11.3.24.

Sir, Received the complaint on 11.03.2024 at 15.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.04/2024 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 11.03.2024 at 16.00 hrs. sd.M.Paul Suther, Deputy Supdt. of Police, V&AC, Tenkasi. 11.03.2024.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

11/3/2024

M. PAULSUTHER.

DSP. V&AC. Tenkasi.